Regd. No. M. 4593. 8-பக்கங்கள். தனிப்பிரதி விலை 0-1-0.

# குடி அரசு

ESTD. 1924

வருட சந்தா உள்நாடு ரூ. 4-0-0. வெளிநா[illegible] ஆர்.எம். சுப்பிரமணியன்

மாலை 21 } ஈரோடு 13-9-1947 சனிக்கிழமை { மலர் 1.

## வாழ்க நம் பெரியார்!



69-வது பிறந்த நாள்: 17-9-47 நாடெங்கும் கொண்டாடுக!

# சிந்தனைத் திரட்டு

[பெரியார் அவர்கள் பற்பல சந்தர்ப்பங்களில் ஆற்றிய சொற்பொழிவுகளிலிருந்து திரட்டிய அரிய சில கருத்துக்களின் தொகுப்பைக் கீழே வெளியிடுகிறோம்—ஆசிரியர்]

★

அறிவுக்கும் அனுபவத்திற்கும் ஒத்து வாராததை பயத்தால் நம்புகிறவன் பக்குவமடைந்த மனிதனாகான்.

0 0

பேராசை இல்லாவிட்டால் எந்த மனிதனும் தனது புத்திக்கும் அனுபவத்திற்கும் ஒவ்வாததை ஒருகாலமும் நம்பி பின்பற்றமாட்டான்.

0 0

கடவுள் நம்பிக்கைகூட மனிதனுக்கு அநேகமாய் பேராசையினாலும் பயத்தினாலும் ஏற்படுவதே யல்லாமல் உண்மையைக்கொண்டல்ல.

0 0

எந்தக்காரியத்தையும் வெளிப்படையாய்ச் செய்கின்றவன் திருடனானாலும் கொலைகாரனானாலும் அவன் யோக்கியனே.

0 0

ஒழுக்கம் என்பது சொல்லுகின்றபடி நடப்பதும் நடந்தபடி சொல்லுவதுமே ஒழிய தனிப்பட்ட குணங்கள் அல்ல.

0 0

கடமை என்பதும், தர்மம் என்பதும் ஒரு மனிதன் மற்றொரு மனிதனிடமிருந்து தனக்காக எதை எதை எதிர்பார்க்கின்றானோ அதனைத் தான் மற்றொரு மனிதனுக்கு வலியச்செய்வது.

0 0

கடவுளைக் காப்பாற்ற மக்கள் புறப்பட்டதாலேயே கடவுளின் பலவீனம் விளங்குவதோடு கடவுள்களுக்கு வரவர பலவீனம் ஏற்பட்டு ஆபத்தும் பலப்பட்டு வருகின்றது.

0 0

அரசனும் செல்வவானும் ஜாதி வித்தியாசத்தை ஆதரிக்கவேண்டியவர்களாகின்றார்கள். ஏனெனில், பிறவியில் உயர்வு தாழ்வு இல்லை என்றால் பணத்திலும் உயர்வு தாழ்வு இல்லாமல் போய்விடுமே என்று பணக்காரன் பயப்படுகிறான்.

0 0

பிறவியிலும் பணத்திலும் உயர்வு தாழ்வு இல்லையானால் ஆளுவதிலும் ஆளப்படுவதிலும் உயர்வு தாழ்வு இல்லாமல் போய்விடுமே என்று அரசன் பயப்படுகிறான்.

0 0

ஆட்சி, பிரபுத்துவம், ஜாதி உயர்வு இம்மூன்றும் உயிர் ஒன்றும் உடல் மூன்றுமாயிருக்கின்றன.

0 0

கொள்ளைக்காரர்களாய் இருந்தவர்களே அரசாளுகிறார்கள். கொடுமைக்காரராய் இருந்தவர்களே பிரபுக்களாகின்றார்கள். அயோக்கியர்களாய் இருந்தவர்களே உயர்ந்த ஜாதிக்காரர்களாகின்றார்கள்.

0 0

வேர்கள் இல்லாவிட்டால் மரங்கள் இருக்கமுடியாது. மூடர்கள் இல்லாவிட்டால் கடவுள்கள் இருக்கமுடியாது.

0 0

கடவுள்கள் இல்லாவிட்டால் அரசன் இருக்கமுடியாது. அரசன் இல்லாவிட்டால் பணக்காரன் இருக்கமுடியாது. பணக்காரன் இல்லாவிட்டால் உயர்ந்த ஜாதிக்காரன் இருக்கமுடியாது. ஆகவே இவை ஒன்றை ஒன்று பற்றிக்கொண்டிருக்கின்றன.

0 0

பெரும்பாலும் அரசாள்வோர்களும் தந்திரக்காரர்களுமே கடவுளையும் வேதத்தையும் ஜாதியையும் உண்டாக்குகிறார்கள்.

0 0

மனிதனின் இவ்வுலக வாழ்க்கைக்காக வகுக்கப்பட்ட கொள்கைதான் மதம் என்றால், அந்த மதம் எதுவானாலும் அதைப்பற்றி யோசிக்கத் தயாராய் இருக்கிறேன்.

0 0

மேல் உலகத்திற்கோ அல்லது கீழ் உலகத்திற்கோ அல்லது செத்தபின் நடக்கும் நடவடிக்கைகளுக்கோ ஏற்பட்டது மதம் என்றால், அது எதுவானாலும் நான் கண்ணெடுத்துக்கூடப் பார்க்கமாட்டேன்.

0 0

மனிதனுடைய மேலோ மிருகத்தினுடையவோ மலம் கையிலோ காலிலோ பட்டுவிட்டால் தண்ணீர்விட்டுக் கழுவிவிடுகின்றார்கள். ஆனால், மனிதர்கள் சரீரத்தின்மேலோ, அல்லது சரீரத்தின் மேல் இருக்கும் துணியின்மேலோ பட்டுவிட்டால் குளித்துத் தீரவேண்டும் என்கிறார்கள். எனவே, இவர்கள் மனிதத்தன்மையுள்ள மனிதர்களா?

0 0

கோயிலைச் சுத்தப்படுத்த என்று மாட்டையும், சாணியையும், மூத்திரத்தையும் கோயிலுக்குள் கொண்டுபோகிறார்கள். ஆனால், மனிதன் அக்கோயிலிலுள்ள கடவுளை வணங்க என்று உள்ளே போனால் சாமி தீட்டாய் விட்டதென்று கும்பாபிஷேகம் செய்கிறார்கள். இவர்கள் அறிவுள்ள மனிதர்களா?

0 0

குற்றம் என்பது நிர்ப்பந்தமில்லாமலே ஒரு மனிதன் தான் எவைஎவைகளைச் செய்ய பயப்படுகிறானோ மறைக்கிறானோ அவைகளை மற்றொரு மனிதன் செய்தால்தான் குற்றமாகும்.

0 0

எந்தக் காரியங்கள் ஒரு மனிதன் தான் அடிக்கடி செய்ய நினைத்ததும், மற்றவர்கள் அறியாதபடி செய்ததும், வேறுபல நிர்ப்பந்தங்களால் இச்சைக்கு விரோதமாய் செய்யமுடியாமல் இருந்ததுமாய் இருக்கின்றவைகளோ, அந்தக் காரியங்களை மற்றவர்கள் செய்தால் அது எப்படிப்பட்டக் காரியமானாலும் ஒருக்காலமும் குற்றமாகாது.

0 0

ஒரு மனிதன் ஒரு பெண்ணைப் பார்த்து ஆசைப்படுவது, ஒரு பறவையைப் பார்த்து ஆசைப்படுவதற்கும் ஒரு வஸ்துவைப் பார்த்து ஆசைப்படுவதற்கும் ஒப்பான காரியந்தானே தவிர, மற்றப்படி அது ஒரு தனிப்பட்ட குற்றமோ, அல்லது மேற்கண்ட மற்றவைகளுக்கு மேற்பட்ட குற்றமோ ஆகிவிடாது. மற்றென்ன குற்றமென்றால் புலனடக்க சக்தியில்லை என்கின்ற பலவீன குற்றம் ஆகும்.

0 0

மனிதன் சட்டமோ மதக்கொள்கையோ ஏற்படுத்த வேண்டுமானால் ஐம்புலன்களின் இயற்கை உணர்ச்சிகளும் ஆசையின் சுபாவத்திற்கும் ஏற்றவிதமே விதிசெய்யவேண்டும். அதற்கு விரோதமான கொள்கைகொண்ட மதமும் சட்டமும் மனிதனை அடிமையாக்கி வைப்பதற்கே ஒப்பாகும்.

0 0

பாவத்திற்குப் பயந்து பதிவிரதையாய் இருப்பவளும், காவலுக்குப் பயந்து பதிவிரதையாய் இருப்பவளும், மானத்திற்குப் பயந்து பதிவிரதையாயிருப்பவளும், புருஷன் உதைக்கு பயந்து பதிவிரதையாயிருப்பவளும் ஒரே யோக்கியதை உடையவளேயாவாள்.

0 0

பாவத்திற்குப் பயந்து திருடாதவனும், காவலுக்குப் பயந்து திருடாதவனும், உதைக்குப் பயந்து திருடாதவனும், மானத்திற்குப் பயந்து திருடாதவனும் ஒரேவித யோக்கியதை உடையவனாவான்.

0 0

மேல்நாட்டில் காகிதங்களினால் மலம் துடைத்து சரஸ்வதியை அலட்சியம் செய்தும் அங்கு 100க்கு 90பேர்கள் படித்திருக்கிறார்கள்.

# ஈரோட்டில் தேர்தல் பொதுக்கூட்டம்

## பெரியாரின் பேருரை.

★

ஈரோடு, செ. 10—

இன்று தேர்தல் பிரசாரத்தை யொட்டி இவ்வூர் முனிசிபல் ஸ்கூல் மைதானத்தில் தோழர் என். மாரியப்பா அவர்கள் தலைமையில் கூட்டப்பட்ட மாபெரும் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் ஈ. வி. கே. சம்பத், எஸ். அப்பாவு முதலியவர்கள் பேசியபின் பெரியார் அவர்கள் 'தற்கால நிலையும் தேர்தலும்'' என்ற பொருள்பற்றி 2½ மணி நேரம் பேசியதாவது:-

''தலைவரவர்களே,
பெரியோர்களே,
தோழர்களே!

நான் ஒரு கட்சியைச் சேர்ந்தவன் என்பதும், அதிலும் தற்சமயம் நாட்டில் சரியாகவோ தப்பாகவோ பெருவாரியான மக்களின் செல்வாக்குப்பெற்று, பெருவாரியான பெரிய ஆட்கள் தங்கள் சுயநலத்துக்காக சென்று அடைக்கலம் புகுந்து ஆதரவளித்துக்கொண்டிருக்கும் காங்கரஸ் என்பதும்- ''சர்க்கார் கட்சி' என்பதுமான காங்கரஸ் கட்சியின் விரோதியாகக் கருதப்பட்டுருகிறவன் என்பதும், மேலும் இந்நாட்டுப் பெரும்பான்மை மக்களால் கண்மூடித்தனமாக நம்பிப் பின்பற்றப்பட்டுவரும் ஹிந்துமதம் என்பதற்கும் விரோதி யென்றும், நாஸ்திகன் என்றும் பிரசாரம் செய்யப்பட்டு வருகிறவன் என்பதும் நீங்கள் அறிந்ததே. ஆதலால் என் கட்சி சார்பில் என் கருத்தையொட்டி எனக்குத் தோன்றியதை ஒரு சாதாரண மனிதன் என்கின்ற தன்மையில், ஒரு சராசரி மனிதனின் குற்றங்களுக்குட்பட்டு பேசுவதாகவே கொண்டு உங்கள் சுய சிந்தனையால், பகுத்தறிவால் ஆராய்ச்சிசெய்து உண்மையை அறிந்துகொள்ள வேண்டுகிறேன்.

சாதாரணமாக தர்மம், நாணயம், நேர்மை என்பது பொதுவானாலும் ஒவ்வொரு கடவுளுக்கும், ஒவ்வொரு மதத்திற்கும், ஒவ்வொரு குலத்திற்கும், ஒவ்வொரு தொழிலுக்கும், ஒவ்வொரு சார்புக்கும் தனித்தனியான நாணயம், நேர்மை, தர்மம் என்பதாக உண்டு. சாதாரணமாக ''ஒரு இந்து பசுவைக் காப்பாற்றவேண்டும். இல்லாவிட்டால் கடவுள் தண்டிப்பார்'' என்பது ஒரு இந்துவின் தர்மமாகும். முஸ்லிம்களும் கிருஸ்தவர்களும் அதையே ஆதாரமாகக் கொள்வரானால், ஆகாரத்திற்கே கடவுள் பசுவை சிருஷ்டித்தார் என்பார்கள். அதற்காக அவர்களை கடவுள் தண்டிக்கமாட்டார் என்று கருதுவார்கள். ஒரே புருஷனோடு வாழ்வதுதான் ஒரு பெண்ணுக்கு தர்மம் என்பான் ஒரு உத்தமப்பெண், ஆனால் எத்தனை பேரை மயக்கித் தன் வலையில் இழுக்கமுடியுமோ அத்தனை பேரையும் மயக்குவதுதானே விபசாரியின் தர்மம் என மதிக்கப்படும். எவனொருவன் எவ்வளவுக்கெவ்வளவு சாமர்த்தியமாகப் பொய்யை மெய்யாகவும், மெய்யைப் பொய்யாகவும் செய்யக் கற்றிருக்கிறானோ அவனையே கைதேர்ந்த வக்கீல் என்று சொல்லவேண்டியது வக்கீல் தர்மம். எவ்வளவுக்கெவ்வளவு இதைக் கண்டுபிடித்து உண்மையறிந்து ஏமாந்து போகாமல் நடுநிலைமையில் நின்று நியாயம் வழங்குகிறாரோ அவரே கைதேர்ந்த நியாயாதிபதி என்பது நியாயாதிபதிக்குத் தர்மம். அதேபோல் எவனொருவன் பித்தலாட்டத்தால் மக்களை ஏமாற்றி பொய்சத்தியம்செய்து கொள்ளை லாபம் அடிப்பதில் சாமர்த்தியஸ்தனோ அவனே கைதேர்ந்த வியாபாரி என்பது வியாபாரதர்மம். இப்படியாகவே ஒரு தொழிலுக்கு எது நாணயமோ, தர்மமோ அது மற்றத் தொழிலுக்கு நாணயமென்று கருதப்படுவதில்லை. இதேபோல்தான் அரசியல், தேர்தல் தொழிலுக்கும் ஒரு நாணயமுண்டு. அரசியல் என்றாலே அயோக்கியத்தனம் என்பது அறிவாளிகளின் கண்டுபிடிப்பு. தேர்தலின் போதும் தனக்கு ஓட்டு கொடுத்தால் ''வரி இருக்காது, வாட்டமிருக்காது, மலைபோல் அரிசி, பருப்பு கனி கொண்டுவந்து குவிப்பேன்'' என்று ஒருவன் ஹிமாலயப் புளுகு சொல்லி ஓட்டுக்கேட்டு பதவிபெற்று, அந்தப் பதவி கொண்டு தன் சுயநலத்தைப் பெருக்கி வயிறு வளர்க்கலாம், இது தேர்தல் தர்மம், தேர்தல் நாணயம் ஆகும். பொதுமக்களும் ஓட்டுப்போட்டு ஏமாந்தவனுங்கூட ''அதெல்லாம் தேர்தல் தந்திரம்'' என்றுதான் சொல்லி விடுவரே ஒழிய அந்தமாதிரி அயோக்கியன் மறுபடியும் வருகிறானே ஓட்டுப் போடக்கூடாது என்று சொல்லமாட்டான். ஆதலால் தேர்தல் சமயத்தில் அரசியல் கட்சி பேசிக்கொண்டு உங்களிடம் இப்போது பேசுகிறேன்.

ஆதலால் பொறுப்புள்ள மக்களாகிய நீங்கள் தேர்தல் தர்மத்தை நன்றாய் ஞாபகப்படுத்திக்கொண்டு மிக மிக ஜாக்கிரதையாக, காதுகொடுத்துக் கேட்டுப் பிறகு உங்கள் பகுத்தறிவை உபயோகித்தல் அவசியம். இல்லாவிட்டால் ஏமாந்து போவீர்கள்.

தற்கால நிலை என்பதில் இப்போது இந்தியா இந்துஸ்தான் என்பதைப் பொறுத்தவரையில் எங்குபார்த்தாலும் ஒரே கலவரமாகத்தான் இருக்கிறது. நாடு கொலைக்களமாக, சுடுகாடாக, இடுகாடாக இருக்கிறது. காந்தியார்கூட போலீஸ் பாதுகாப்பால்தான், மற்ற சில ஆண்கள் பெண்கள் பாதுகாப்பால்தான் உயிர் வாழ முடிகிறது. வடநாட்டில் பட்டப்பகலில் கொள்ளை, களவு, படுகொலை, ரயில் கவிழ்த்தல், நாசவேலை செய்தல் பகிரங்கமாக நடந்துவருகின்றன. டெல்லி இன்று சுடுகாடாக ஆக்கப்பட்டு வருகிறது. அதைக் கலவரப் பிரதேசமாக அரசாங்கத்தார் விளம்பரம் செய்துவிட்டார்கள். வெள்ளைக் கொடுங்கோலனான டையரவது அன்னிய ஆட்சியில் 'மறுத்தவனை சுடு'' என்றான். ஆனால் நம் சுயராஜ்ஜிய சர்க்கார் டெல்லியில் காவல்புரியும் போலீசுக்கும் மிலிடரிக்கும் ''சாகடிப்பதற்கே சுடுங்கள், சாகும்வரை சுடுங்கள்'' என்று உத்திரவு பிறப்பித்திருக்கிறார்கள். யார் என்றால் அஹிம்சாமூர்த்தியின் சிஷ்யர் 2வது மந்திரி படேல் வீரமகன் டில்லியில். அங்கு மக்கள் தம் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள திண்டாடுகிறார்கள், மந்திரிகள் உள்பட. ஆனால் நாம் இங்கு அந்தப்படி உயிருக்குத் திண்டாடாமல் சோற்றுக்கும் துணிக்கும் திண்டாடிக்கொண்டிருக்கிறோம்.

ஏதோ செல்வவான்கள் அதிலும் மங்கம்மா (Black Market) வில் கைதேர்ந்தவர்கள்தான் அதாவது தேசபக்த தியாகிகள் கூட்டம்தான் உணவுக்கும் உடைக்கும் கஷ்டமின்றி இருக்கிறார்களே தவிர அதனாலேயே பணம் சேர்க்கிறார்களே தவிர மற்றைய பெரும்பாலான ஏழைகளுக்கு உண்ண உணவில்லை, உடுக்க உடையில்லை, இருக்க கூரையில்லை, விளக்குக்கு எண்ணெய் இல்லை என்ற நிலைதான் காணப்படுகிறது. நல்லவர்கள் நாணயஸ்தர்கள் என்பவர்கள் அரசாங்கத்திடமும் தேசபக்த தியாகிகள் என்பவர்களிடமும் சிக்கிக்கொண்டு மகா அவஸ்-

[தொடர்ச்சி 5ம் பக்கம்]

# குடி அரசு

13-9-47 சனிக்கிழமை


## "சுயராஜ்ஜியம்" வந்தபிறகுமா தேர்தல் பித்தலாட்டம்?

"இந்நாட்டுக்கு சுயராஜ்ஜியம் வந்து விட்டது. சுதந்திர விழாவும் கொண்டாடியாகிவிட்டது. எனவே தேசியம் வெற்றிபெற்று நாடு விடுதலை அடைந்து விட்டது", என்று காங்கரஸ், தேச பக்தர்களால் சொல்லப்படுகிறது. ஆதலால் இனிமேல் எந்தக்காரணம் கொண்டும் இந்நாட்டுக்கு ஆகஸ்டுத்தனம்—அதாவது தண்டவாளம் பேர்ப்பதோ, தந்திக்கம்பி அறுப்பதோ, கட்டடம் இடிப்பதோ, ரிக்கார்டுகளைக் கொளுத்துவதோ, அதிகாரிகளைக் கொல்லுவதோ முதலாகிய "ஆகஸ்டுத்தனத்துக்கு" இனிமேல் எங்கும் வேலையில்லை. ஆகஸ்டு வீரர்களுக்கும், தியாகிகளுக்கும் அவர்களது—அதாவது அவர்களுக்கே சொந்தமானது என்பதான—அந்த வேலைகள் செய்யவேண்டிய அவசியமில்லை. இனி நாட்டு மக்களுக்குள் தேசியவாதி என்றும், தேசிய வாதி அல்லாதவன் என்றும் பிரிவினை காட்டி மக்களைப் பிரித்து வைக்க வேண்டிய அவசியமுமில்லை. அப்படிப்பட்ட தேசிய சேவையும் இல்லை. மற்றும் தேசப் பொதுக்காரியங்களில் எதிலும் இனிமேல் தேசபக்தர்களே இருந்துதான் செய்யவேண்டும் என்கின்ற காரியமும் இருப்பதற்கு இடமுமில்லை. ஏன் என்றால் வெள்ளையன் (அன்னியன்) வெளியில் போயே போய் விட்டான். நாடு நமதே ஆகி விட்டது.

இந்த நிலையில் இப்போது நடைபெறும் ஒரு சாதாரண முனிசிபாலிடி தேர்தலுக்கு தேசியத்தையும் ஆகஸ்டுத்தனத்தையும் மஞ்சள் பெட்டியையும் கொண்டு வந்து போட்டு பாமர மக்களை ஏமாற்றி ஓட்டுப்பிச்சை கேட்க வேண்டிய அவசியம் என்ன வந்தது? ஆகஸ்டு தினத்தின் பெயரைச் சொல்லிக்கொண்டு முனிசிபல் தேர்தலில் நிற்கவேண்டிய அவசியம் ஆகஸ்டு வீரர்களுக்கு ஏன் வந்தது? என்று கேட்கிறோம்.

இனி தந்திக் கம்பி அறுக்கவும் தபால் பெட்டியில் தீ வைக்கவும், அதனால் வெள்ளையனை விரட்டவும்" சுயராஜ்ஜியம் கொண்டு வரவும் பாடுபட அவசியமில்லாமல் போய் விட்ட பிறகுகூட ஆகஸ்டு தினத்தைச் சொல்லிக் கொண்டு, தேசியத்தைச் சொல்லிக்கொண்டு தேர்தலுக்கு நிற்பதும், மஞ்சள் பெட்டிக்கு ஓட்டுக் கேட்பது பித்தலாட்டமான காரியமா அல்லவா அல்லது பித்தளை செம்புக்கு மஞ்சள் துணியில் மூடி கட்டி பட்டை நாமம் போட்டுக்கொண்டு "வெங்கிடாசலபதிக்கு கோவிந்தா" என்று கூப்பாடு போட்டுக் காசு கேட்பது போன்ற காரியமா இல்லையா என்று யோசித்துப் பார்க்கும்படி பொதுமக்களை வேண்டுகிறோம்.

முனிசிபாலிடி என்பது அதன் நிர்வாகம் யாவும் முனிசிபல் டவுனைப் பொறுத்த காரியமே தவிர அதுவும் சுகாதாரம், ஆரம்பக் கல்வி, ரோடு, விளக்கு முதலாகிய காரியங்களையே கவனிக்கவும், அதன் செலவுக்கு மக்களிடம் வரி வசூலிக்கவும் மாத்திரம் அதிகாரம் உடையதும், அந்த அதிகாரமும் இந்திய சர்க்காரும் மாகாண சர்க்காரும் ஏற்கனவே செய்திருக்கும் சட்டப்படியும் வரி விதித்திருக்கும் விகிதப்படியும் மாகாண சர்க்காரால் அனுப்பப்பட்ட நிர்வாக அதிகாரிகள் செய்வதை, வசூலிப்பதை, சரியா தப்பா என்று கவனிக்கவேண்டியதையும் தவிர வேறு எந்த விதமான உரிமையும் அதிகாரமும் இல்லாத முனிசிபாலிடி தேர்தலுக்கு தேசியப்போர்வையும் தியாகக் கூலியும் ஏன்? எதற்காக? என்று சிந்தித்துப்பார்க்கும்படி அறிவுள்ள, பகுத்தறிவுள்ள, சுதந்திரபுத்தியுள்ள நகர ஓட்டர் பிரபுக்களை, ஓட்டர் தாய்மார்களை, ஓட்டர் தோழர்களை மறுமுறையும் வேண்டிக் கொள்கிறோம்.

இந்த 10 வருட காலமாக காங்கரஸ் கட்சியின் சார்பாக தொடர்ந்து இருந்து வந்த தேசியப் புலிகள் அவர்களுக்குமுன் 10 வருட காலமாக இருந்த தேசிய வீரர்கள் அல்லாதவர்கள் செய்ததைவிட அதிகமாக மக்களுக்குச் செய்த நன்மை என்ன? அல்லது காங்கரஸ் திட்ட வேலை என்ன? கட்சி வேலை என்ன என்று கேட்கிறோம்.

தண்டவாளத்தைப் பேர்க்காதவனும், தந்திக்கம்பி அறுக்காதவனும், ரிக்கார்டுகளுக்கு நெருப்பு வைக்காதவனும், முனிசிபல் சபையில் இருந்தால் அதிகாரிகள் சரியாய் வேலை பார்க்கமாட்டார்களா? விளக்கு சரியாய் எரியாதா? துடப்பம் சரியாய்க் கூட்டாதா? பிள்ளைகளுக்குப் படிப்பு நுழையாதா? குப்பை கூளங்கள் கசுமாலங்கள் வண்டி ஏறாதா என்று கேட்கிறோம்.

முனிசிபல் நிர்வாகத்தில் ஜெயிலுக்குப் போக வேண்டிய திட்டம் ஏதாவது இருக்கிறதா? அல்லது முனிசிபல் கவுன்சிலர் ஸ்தானம் ஜெயிலுக்குப் போனவர்களுக்குக் கூலியாகக் கொடுக்கப்பட ஏற்பட்ட மாற்றுப் பண்டமா? அல்லது காங்கரஸ் பேரால் அல்லாமல் தனிப்பட்ட முறையில் நிற்கும் மற்றவர்கள் கவுன்சிலர் பதவிக்குத் தங்களைவிட தகுதி, உரிமை அற்றவர்களா என்பதை தேசிய வாதிகள் மக்களுக்கு விளக்கி விட்டு "மஞ்சள் பெட்டிக்கு ஓட்டுப் போடுங்கள், வந்தேமாதரம்"! என்று கேட்டிருந்தால் அது நாணயமாகவும் புத்திசாலித்தனமாகவும் இருந்திருக்கும். அப்படிக்கில்லாமல் முனிசிபல் எல்லைக்குள் வீடு வாசல்கள் உள்ளவனும், போதிய பணம் காசு வரும்படி உள்ளவனும், அவசியமான வரி வட்டம் கொடுப்பவனும், எழுதப்படிக்கத்தெரிந்தவனுமான எவனும் ஓட்டராக இருக்கவும் அபேட்சகராக இருக்கவும் தகுதியுடையவன் என்று சட்டம் செய்து அப்படிப்பட்டவர்கள் பெயரையும் அச்சடித்து வெளிப்படுத்தி விட்டு அந்த பெயர் பட்டியை (ஓட்டர் லிஸ்டை) சுயராஜ்ஜிய சர்க்காரும் ஒப்புக்

கொண்டு "புதிய சுயராஜ்ஜியத்தில் யாவருக்கும் சட்டப்படியான எல்லா உரிமைகளும் கட்சி பேதமில்லாமல் பாரபட்சமில்லாமல் அனுபவிக்க உரிமை உண்டு, என்று மூவர்ண விஷ்ணு சக்கர ராமராஜ்ஜியக் கொடியைப் பறக்கவிட்டு விட்டு "ஆகஸ்டு தியாகிகளுக்கு மாத்திரம் ஓட்டுப்போடு, தேசிய வாதிக்கு மாத்திரம் ஓட்டுப்போடு, மஞ்சள் பெட்டிக்கு ஓட்டுப்போடு" என்று காங்கரஸ்காரர்கள், அதாவது இன்றைய சர்க்காருக்குச் சொந்தமானவர்கள் என்று சொல்லிக்கொள்கிறவர்கள் பிரசாரம் செய்வது என்றால் இது ப்ளாக் மார்கட்டு (கள்ள வியாபார) காங்கரசா? நேர்மையான (கன்ட்ரோல் ரேட்) காங்கரசா? என்று கேட்கின்றோம். "சர்க்காரும் காங்கரசும் ஒன்று. இன்று நடப்பது காங்கரஸ் சர்க்கார்" என்று சொன்ன பிறகு காங்கரஸ்பேரால் தேர்தலில் நின்று சர்க்கார் ஆட்களுக்குத்தான் ஓட்டுப் போட வேண்டும் என்று ஓட்டு வேட்டை ஆடுவது காங்கரசை துஷ்பிரயோஜனம் செய்வது என்றும், அல்லது தேசியம் லஞ்சம் வாங்குகிறது— கேட்கிறது என்றும்தானே அர்த்தமாகிறது. தேச பக்தனுக்கு, ஆகஸ்டு தியாகிக்கு இந்தப் போர்வை இல்லாமல் சொந்தத்தில் யோக்கியதை இருக்குமானால்— சொந்தப்பெயருக்கு மதிப்போ, தகுதியோ, நாணயமோ இருக்குமானால் — அதிகாரத்திலிருக்கும் கட்சியின் பேரைச் சொல்லி மக்களை ஏமாற்ற வேண்டிய அவசியமில்லாமல் யோக்கியமாக ஏன் நடந்து கொள்ளக்கூடாது என்று தேச பக்தர்களையும் தியாகிகளையும் கேட்கிறோம்.

கட்சியின் பேரால் நிற்பதற்கும் ஆகஸ்டு தியாகத்தைச் சொல்லிக்கொண்டு ஓட்டுக் கேட்பதற்கும் காங்கரஸ்காரர்களுக்கு அனுமதி கொடுத்த காரணததாலேயே காங்கரசுக்கு நேர்மையில்லை என்கின்ற மாசு ஏற்பட்டு விட்டது என்பதோடு காங்கரஸ் இனியும் கூட பொது மக்கள் ஸ்தாபனம் அல்ல, கட்சிப்பற்றற்ற ஸ்தாபனம் அல்ல, அது ஒரு தனிப்பட்ட கட்சி என்பதை காங்கரசே ஒப்புக்கொண்டதாகவும் ஆகிவிடுகிறதா இல்லையா என்று கேட்கிறோம்.

இதிலிருந்து காங்கரஸ்காரருடைய யோக்யதையும் காங்கரஸ் ஸ்தாபன யோக்யதையும் காங்கரஸ்காரர்களுக்குள் ஆகஸ்டு தியாகிகளுடைய யோக்கியதையும் எப்படி இருந்த போதிலும் ஓட்டர்களுக்கு ஒரு தனிப்பொறுப்பும் இருக்கிறது என்பதை ஓட்டர்களுக்கு எடுத்துக்காட்டுகிறோம். அதாவது "காங்கரஸ் பார்த்து ஒரு மரக்கட்டையை நிறுத்தினாலும் ஒரு கழுதை நிறுத்தினாலும் கண்ணை மூடிக்கொண்டு ஓட்டுப் போட வேண்டும் என்பதை மறந்து விட்டு முனிசிப்பல் தேர்தலுக்கு நிற்கும் அபேட்சகர்களை முனிசிபாலிட்டியை பொறுத்தவரையிலாவது கட்சி பார்க்காமல் அபேட்சகர்களுடைய தனித்த யோக்கியதை, தகுதி, நாணயம், திறமை ஆகியவைகளைக் கொண்டு அளந்து பார்த்து ஓட்டு செய்து தெரிந்தெடுக்கவேண்டியது முனிசிபல் ஸ்தாபனத்தின் நலத்தைக் கருதி அவசியமான காரியம் என்பதை ஓட்டர் கனவான்களுக்கு வலியுறுத்திக் கூறுகிறோம். கட்சிப்பேரைச் சொன்னால் ஒழிய மற்றப்படி தனக்கு வேறு யோக்கியதை—தகுதி இல்லை என்பதைத் தெளிவாக தங்களுக்கே சந்தேகமில்லாமல் தாமே ஒப்புக்கொண்டவர்கள்தான் இன்று கட்சிப் பேரைச் சொல்லிக்கொண்டு நிற்கிறார்கள் என்பதை ஓட்டர்கள் கண்டிப்பாய் உணர வேண்டுகிறோம். ஏனெனில் முனிசிபாலிடிக்கு யோக்கியதையும் தகுதியும் நாணயமும்தான் தேவையே ஒழிய கட்சி தேவையில்லை என்பதோடு அங்கு கட்சியின்பேரால், கட்சியாக மாத்திரம் கூடி செய்யக்கூடிய காரியம் ஏதும் இல்லை என்றும் உறுதியாய்க் கூறுகிறோம்.

இதை மறுத்து எந்தக் காங்கரஸ்காரராவது தேசிய தியாகியாவது சொல்லட்டும், இது வரையாவது சொன்னார்களா? இருந்தால் சொல்லி இருக்கமாட்டார்களா? எனவே பதவி பெற நியாய வழியில் தகுதி அற்றவர்கள் ஒரு தந்திரமாக மஞ்சள் பெட்டி, வந்தேமாதரம் என்கிறார்களே ஒழிய வேறில்லை.

"நாங்கள் போனால்தான் முனிசிபாலிடியில் மூவர்ணக்கொடி ஏற்ற முடியும்" என்று இனி எவராலும் சொல்ல முடியாது. ஏனெனில் மூவர்ண சக்கரக்கொடி சர்க்கார் கொடியாக ஆகி விட்டதால் முனிசிபல் கட்டடங்கள் மீது அக்கொடிக்கு யார் தயவும் இல்லாமல் பறக்க உரிமை உண்டு. வரி விகிதம் குறைக்கவோ, கூட்டவோ முனிசிபாலிட்டிக்கு உரிமையில்லை. சர்க்காருக்குத்தான் உரிமை உண்டு. வீடு வாசல் சொத்து உள்ள எவனும், வரி கொடுக்கும் எவனும் அறிவுள்ளவன் எவனும் வரி விஷயத்தில் மக்களுக்கு அனுகூலமாய்த்தான் நடந்து கொள்ளுவான். இதற்குச் சட்டம் மீறவேண்டியவனே தேவையில்லை. மற்றபடி மக்களுக்கு சோற்றுக்கும் துணிக்கும் வாய்க்கரிசிக்கோ, வாய்க்கட்டு துணிக்கோ ஒரு கடுகளவு உதவி செய்யக்கூட முனிசிபாலிடிக்கு அதிகாரமோ தகுதியோ கிடையாது. அங்கு யார் சென்றாலும் சர்க்கார் அளக்கும் படி அளவுதான் கிடைக்கும். ஆதலால் பிளாக் மார்க்கட் அபேட்சகர்களை அதாவது காங்கரசின் பெயரையும் தியாகத்தின் பெயரையும் சொல்லிக்கொண்டு உங்களிடம் வந்து ஆகஸ்டு தனத்துக்குக் கூலியாக ஓட்டு (கூலி) கேட்கும் கூலிக்காரர்களுக்கு ஏமாந்து ஓட்டின் மதிப்பைக்கெடுத்து விடாதீர்கள் என்று வேண்டிக்கொள்ளுகிறோம்.

ஓட்டு வேட்டையில் பிளாக் மார்க்கட் (கள்ள மார்க்கட்) புகுந்து விடாதபடி ஜாக்கிரதையாக இருங்கள் ஓட்டர்களே! என்று வணக்கத்தோடு எச்சரிக்கை செய்கிறோம்.

சந்தாதாரர்களுக்கு

ஏற்கனவே சந்தா அனுப்பியவர்களில் இன்னும் மீதித்தொகை எங்களிடம் இருப்பவர்களுக்கு மட்டும் அவர்களை சந்தாதாரர்களாகப் பதிவு செய்துகொண்டு பத்திரிக்கை அனுப்பப்படுகிறது. மற்ற தோழர்கள் தங்கள் சந்தாவை புதுப்பித்துக்கொள்ள வேண்டுகிறோம். மானேஜர்.

(3ம் பக்கத்தொடர்ச்சி)

ளைப்படுகிறார்கள். திருடர்களும் பித்தலாட்டக்காரர்களும் தேசிய—காங்கரஸ்—முத்திரையில் தப்பித்துக்கொள்கிறார்கள். இதுவரை என்றும் கண்டிராத இந்நிலையைத்தான் இன்று வெட்டவெளிச்சமாக காண்கிறோம். கதர்க்கொடி போட்டுக்கொண்டு கொள்ளை அடிப்பதே வர்த்தகர் தர்மமாகப் போய்விட்டது, காந்திக் குல்லாய் போட்டுக்கொண்டு போலீஸ் அதிகாரிகளை மிரட்டி காலித்தனம் செய்வதே தியாகிகள் தர்மமாகப் போய்விட்டது. அயோக்கியர்களுக்கு லைசென்சு கொடுப்பதே மந்திரிகளின் நிர்வாக தர்மமாகப் போய்விட்டது. இதெல்லாம் எப்போது என்றால் சுயராஜ்ய காலத்தில், சுதந்திரவிழா கொண்டாடிய பின்பு, ராமராஜ்யத்தில், அதுவும் மகாத்மாக்கள் சதா கடவுளிடம் பிரார்த்தனைகளும், மௌன விரதங்களும் அனுஷ்டிக்கின்ற காலத்தில் அதாவது சமதர்ம வீரர் ஜவஹர்லால் நேருவும் அவரது சகாக்களான சர்தார்களும் குட்டி காந்திகளும் இராமராஜ்ஜியத்தின் கீழ் மகாத்மாவின் பாதுகையை வைத்து பரதாழ்வானாக இருந்து ஆட்சி செலுத்திக்கொண்டிருக்கும் இந்தக் காலத்தில்தான் இந்நிலை காண்கிறோம். காண்பது மாத்திரமல்லாமல் இந்நிலை சமீபத்தில் மாறும் என்று நம்புவதற்கோ நினைப்பதற்கோ கூட எடுகலவு ஆதாரம் கூடக்காண முடியவில்லை.

தோழர்களே! இதற்கெல்லாம் யார் பொறுப்பாளிகள்? என்ன காரணம் என்று யாராவது சிந்தித்ததுண்டா? யாராவது கவலை எடுத்துக் கொண்டதுண்டா? இதற்குப் பித்தலாட்டம் காரணமா அல்லது பித்தலாட்டக்காரனை நம்பி எவன் எக்கேடு கெட்டாலென்ன என்று தன்னலத்தையே முக்கியமாகக் கருதிக்கொண்டு அரசியல் தர்மத்தினுடையவும் தேர்தல் தர்மத்தினுடையவும் தன்மையைப்பற்றிக் கவலைப்படாது எவனெவன் எதை எதை சொன்னானோ அதையெல்லாம் கண்மூடித்தனமாய் நம்பி பொறுப்பும் கவலையுமற்று பகுத்தறிவை சிறிதும் பயன்படுத்தாமல் "காங்கரஸ் பேரைச் சொன்னால் கழுதையை நிறுத்தினாலும் ஓட்டுப்போட வேண்டும்" என்ற மகாத்மாக்கள் சொல்படி நடந்ததா அல்லவா? மற்றும் 'எப்படியாவது என்ன காலித்தனம் என்ன பித்தலாட்டம் செய்தாவது எப்படிப்பட்ட அயோக்கியனைத் தலைவனாக்கியாவது சுயராஜ்யம்பெற்றுக்கொண்டால் சரி" என்கின்ற அரசியல் ஞானமற்ற தன்மையினாலா அல்லவா? சிந்தித்துப்பாருங்கள். தோழர்களே! "சுயராஜ்யம் வந்தால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒரு குறையும் இருக்காது" இன்று சுயராஜ்யம் வந்த பிறகு "தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பரிகாரம் என்ன" என்று கேட்டால் அதற்குப் பட்டேல் பதிலளிக்கிறார்: "அன்று பம்பாயில் காந்தியின் மீது கல்லெறிந்த வர்க்கத்தைச் சேர்ந்தவர்களன்றோ நீங்கள், உங்களுக்குப் பரிகாரம் கிடையாது" என்கிறார். அடுத்தபடியாக முஸ்லிம் தோழர்கள் "நாங்கள் தனிப்பட்ட மைனாரிட்டிகளாயிற்றே எங்களுக்குப் பாதுகாப்புக் கொடுங்கள்" என்றால் அதற்கு பதில் "பிரிவினையை ஆதரித்தவர்களல்லவா நீங்கள், போங்கள் பாகிஸ்தானுக்கு" என்கிறார். இந்த ஆணவமான பழிவாங்கும் பேச்சுக்கு யார் காரணம்? கொடுங்கோன்மைக்கு மாறு பெயர் வைத்து அழைக்கப்படும சுதந்திரவிழா கொண்டாடிய சுதந்திரமல்லவா? இதை எதிர்த்துப் பேச அங்கு ஒரு ஆளாவது இருக்கவில்லையே. இதுதான் சுயராஜ்ய அரசாங்கத்தின் யோக்கியதையா? இதற்கு சுயசிந்தனையற்று சுயநலத்தையே குறிக்கோளாய்க் கொண்டு ஆட்டு மந்தைகள் போல் காங்கரசை பின்பற்றியதுதானே காரணம் அல்லாமல் வேறு என்ன சொல்லுங்கள். இனியாவது உங்கள் சிந்தனையைக் கிளறி விட்டு இதற்கு பரிகாரம் தேடுங்கள், தோழர்களே! அதற்காகத்தான் யார் எதைச்சொன்னாலும் உங்கள் பகுத்தறிவைப் பயன்படுத்தி சிந்தித்துப்பாருங்கள் என்கின்றேன்.

நமது படிப்பில்லாத கண்மூடித்தனமான ஏழை மக்கள் பாடுபட்டும தாங்கள் ஏன் பட்டினி என்று யோசிப்பதில்லை. அப்படி யோசித்தாலும் எல்லாம் கடவுள் செயல் என்று மகாத்மாக்கள் சொல்லுவதை நம்பி கடவுள் செயல் என்றுதான முடிவு செய்வார்கள். இந்தப்பட்டினித் தொல்லை எவ்வளவு காலமாக இருந்து வருகிறது? இரண்டு மூன்று வருஷமாக இந்தப் பஞ்சக்கூப்பாடு கேட்டுக் கொண்டுதானே இருக்கிறது. இரண்டு மூன்று வருட காலமாகவா மழை இல்லை? அல்லது விளைச்சல்தான் இல்லையா? விளைந்தது மக்களுக்குக் கிடைக்காமல் போகிறதா? எது உண்மை? மூட்டை மூட்டையாக லக்ஷக்கணக்கில் மணிலாப்பயறும்; டின் டின்னாக லக்ஷக்கணக்கில் எண்ணெயும் ஏற்றுமதியாகி நம்நாட்டை விட்டு வெளிமாகாணத்துக்கு, வெளிநாட்டுக்குப் போகிறதா இல்லையா?, இதையாராவது ஏன் என்று கேட்டதுண்டா? இவை வெளியில் அனுப்பப்படாமல் இருந்தால் நமக்கு சோற்றுப் பஞ்சம் வருமா? துணியில்லை என்று கூவுகிறார்கள். நம் நாட்டில் பஞ்சு விளையவில்லையா? அல்லது ஆலைகள்தான் இல்லையா? தொழிலாளி இல்லையா? நெசவாளி இல்லையா? பின் ஏன் துணிப்பஞ்சம்? பஞ்சு விளைந்த கணக்கும் நூல் பேல் கணக்கும் நெசவாளி கணக்கும் போட்டுப் பார்த்து சிந்திப்பதில்லை நமது தேசபக்தர்கள், படித்தவர்கள், சுயநலமிகள், பணக்காரர்கள், சிறப்பாகப்பார்ப்பனர்கள் இந்நிலையை நீடிக்கவே முயற்சி செய்து கூடுமானவரை கொள்ளையடிக்கப் பார்க்கிறார்கள். இதை அறியும்படியான புத்தி ஓட்டர்களுக்கு இல்லை. அதிகாரமோ ஆட்சிக்கயிறோ பாடுபடும் மக்களிடம் இல்லாமல் இந்தக் கொள்ளைக் கூட்டத்திற்கு சகாக்களான பச்சைப் பித்தலாட்ட முதலாளிக்கூட்டத்தினிடமும் வன்னெஞ்சப் பார்ப்பனரிடமும் எதைக்காட்டிக் கொடுத்தும் கூலி பெறும் தேசபக்த தியாகிகளிடமும் சிக்கிக்கொண்டிருக்கிறது. ஆதலால் பாமர மக்களைப்பற்றிச் சிந்திக்கவேண்டிய அவசியமோ, நேரமோ, கவலையோ அவர்களுக்கில்லை.

திராவிடநாட்டுப் பிரிவினையை எதிர்க்கும் தேசிய பக்தர்கள் சற்று சிந்திக்கட்டும். நம்மிடம் அதிகாரம் இருந்தால் நம் மக்கள் பட்டினியிருக்கவும் நாம் உண்டாக்கும் விளைபொருளும் சாக்கும் அயல்நாட்டுக்கு ஏற்றுமதியாகவும் நாம் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? பார்த்துக் கொண்டிருப்போமா? "நாட்டுக்கு நல்ல துரை வந்தாலும் தோட்டிக்குப் புல் சுமக்கும் வேலை போகாது. சக்கிலிக்கு கக்கூசு எடுக்கும் வேலை போகாது" என்றபடி நம் பாமர மக்கள் வாழ்க்கையில் நேற்று வந்த சுயராஜ்யத்தால்—ராமராஜ்யத்தால்—நேரு, படேல் ராஜ்யத்தால் நமக்கு சூத்திரப்பட்டம் போய் விடுமா? சோம்பேறி, ஊரார் உழைப்பை உண்டு ஏப்பமிடும் பார்ப்பானுக்கு பிராமணப் பட்டம் போய்விடுமா? என்று கேட்கிறேன் ஊராரைச் சுரண்டி வாழ்தலையே கடமையாகக்கொண்டிருந்த ஒரு நயவஞ்சக ஆரிய ஏகாதிபத்தியக் கூட்டத்திடம் அதிகாரம் சிக்கிக்கொண்டது தவிர வேறென்ன நன்மை நமக்கேற்பட்டது? இன்று ஒருவன் வாழ வேண்டுமானால் அவன் ஆரியனாகவாவது இருக்கவேண்டும் அல்லது ஆரியனுக்கு அடிமையான அனுமார் விபீஷணனாகவாவது இருக்கவேண்டும். அப்படி இல்லாவிட்டால் தேசத்துரோக—ராக்ஷசன் ஆகி விடுகிறான். இந்நிலைதானே இன்றைய சுயராஜ்யத்தில் நமக்கு. இனி தேர்தல்பற்றி சில சொல்லுகிறேன்.

## தேர்தல்

முனிசிபாலிட்டி என்பது உள்நாட்டு நகரபரிபாலன—லோகல்போர்டு இலா

காலைச் சேர்ந்தது. இதை நடத்துவதற்கான சட்டதிட்டங்கள் யாவும் சட்டசபை மூலம் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டுள்ளது. அவற்றை நடத்திவைப்பதற்கான அதிகாரிகளும் மாகாண அரசாங்கத்தாரால் ஜனநாயக மந்திரிகள் என்பவர்களால் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் முழு அதிகாரத்தோடு சரிவர மேலே கூறப்பட்ட நிர்வாக சட்டப்படி வேலை செய்கிறார்கள். அந்த சட்டத்திலோ அதிகாரிகளிடமோ அவர்களுக்கும் கீழ்ப்பட்ட சிப்பந்திகளிடமோ இவர்கள் இருவர்களுடைய வேலைகளிலோ வேலை முறைகளிலோ பிரவேசிக்க யாருக்கும் அதிகாரமில்லை. அந்த அதிகாரிகள் சரியாய் வேலை செய்கிறார்களா? வரி வருமானம் சரிவர முனிசிபாலிடியின் நன்மைக்காக உபயோகப்படுத்தப்படுகிறதா என்பதை வேண்டுமானால் ஒரு வரி கொடுப்பவனைப் போல் கவனித்து மேலிடத்துக்கு தெரிவிக்கலாமே தவிர அதிகாரிகளை, சிப்பந்திகளை கண்டிக்கவோ ஏதாவது சமாதானம் கேட்கவோ கூட கவுன்சிலர்கள் என்பவர்களுக்கு உரிமையில்லை. அந்த விஷயத்திலும் முன் சொன்ன முனிசிபாலிடியைச் சேர்ந்த ஒரு சாதாரண ஓட்டர் மனிதனுக்குள்ள உரிமைதான் முனிசிபல் கவுன்சிலருக்கும் உண்டு. முனிசிபல் கவுன்சிலில் கவுன்சில் மெம்பர் தவிர மற்ற முனிசிபல் ஆபீஸ் இடங்களில் நுழையவும் கமிஷனர் அனுமதிபெறவேண்டியது அவசியம். வேண்டுமானால் சில கவுன்சிலர்கள் சேர்ந்து மனுப்போட்டு ஸ்பெஷல் ஆபீஸரை வேறிடத்திற்கு மாற்றும்படி செய்யலாம். இந்த ரோட்டு போடலாம். இந்தப் பள்ளத்தைத் தூர்த்துவிடலாம் என்று வேண்டுமானால் யோசனை கூறலாம். இதைக் கவுன்சிலர் கூறாவிட்டாலும் இஞ்சினீயர் செய்துதான் தீருவார். அதிலும் "தன் சௌகரியத்திற்காக கவுன்சிலர் இதைச் செய்து கொண்டார். தனக்குச் சொந்தத்தில் உதவாததால் தான் இந்த ஸ்பெஷல் ஆபீஸரை சேர்மென் அல்லது இன்ன கவுன்சிலர் மாற்றச் சதி செய்கிறார்" என்று சில சமயங்களில் மக்கள் தூற்றுதலுக்கு ஆளாக வேண்டியும் ஏற்பட்டுவிடும். மேலும் தனது தாட்சண்யத்திற்காக அடுத்த தடவை ஓட்டுப் பெற தனக்கு ஓட்டுப் போட்டவர்களுக்கு நல்ல பிள்ளையாக நடந்து கொள்வதற்காக சில சீர்திருத்தங்களைச் செய்யாமல் கூட தடுக்க வேண்டியும் நேரிடலாம். ஆகவே இந்தப் பயனற்ற உரிமை அற்ற தன்மை கொண்டதான முனிசிபல் ஸ்தாபனம் இந்த முறையில் இருப்பதைவிட எடுத்துவிடுவது எவ்வளவோ பலன்தரலாம். முனிசிபாலிடி ஜில்லா போர்ட் என்பவைகள் கலைக்கப்படவேண்டியவை என்பது சுயராஜ்யம் வந்தவுடன் முதலில் செய்திருக்கவேண்டிய வேலை என்றுகூட இதைச் சொல்வேன். முனிசிபாலிடி ஏற்படுத்தியதின் நோக்கமே மக்களுக்கு தேர்தல் அநுபவமும் சுயராஜ்ய நிர்வாக அநுபவமும் ஏற்படுவதற்காகத்தான். அதாவது சுயராஜ்யம் வந்தால் அதை நிர்வகிக்கக் கூடிய அநுபவம் முன்னாடி தெரிந்திருப்பதற்கு. ஆகவே முனிசிபாலிடி நிர்வாகம் தோற்றுவிக்கப்பட்டது. இப்போதுதான் சுயராஜ்யம் வந்து விட்டது. நம்மக்களே ஆட்சி புரிந்து வருகிறார்கள். அதாவது மந்திரிகள், ஜனப் பிரதிநிதிகள் ஏற்பட்ட பிறகு இம்முறையை கலைத்து விடுவதற்கென்ன ஆக்ஷேபனை? இந்திய சுயாட்சி, மாகாண சுயாட்சி ஏற்பட்ட பிறகு இனியும் நகர சுயாட்சி என்பது எதற்கு?

முனிசிபல் நிர்வாகம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவரின் கண்காணிப்பில் இருக்கவேண்டுமானால் லோகல் போர்டு இலாகா மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மந்திரியின் கீழ் இருப்பது போதாதா? சுயராஜ்ய சர்க்காரில் கவுன்சிலர்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய அவசியமில்லையே! இப்படியே விட்டால் நாளடைவில் ஓவர்சியர்கள், சேனிடரி இன்ஸ்பெக்டர்கள், தெருக் கூட்டுவோர் இவர்கள்கூட தேர்ந்தெடுக்கப்பட்டவராக இருக்கவேண்டும் என்ற நிலை வந்து விடுமே.

இப்போது தாலுக்கா போர்ட் இல்லையே. தாலுக்கா நிர்வாகம் என்ன கெட்டா போய் விட்டது? பல ஆஸ்பத்திரி நிர்வாகம் பள்ளிக்கூட நிர்வாகம் அநேக ரோட்டு நிர்வாகம் எல்லாம் ஜில்லா போர்டின் கீழிருந்து மாகாண அரசாங்கத்தாரால் எடுத்துக்கொள்ளப்பட்டு விட்டதே அதனால் அவைகளின் நிர்வாகம் கெட்டாபோய் விட்டது? இன்று மாகாண சர்க்கார் கீழ் மாஜிஸ்திரேட் இருக்கிறார். ரிஜிஸ்ட்ரார் இருக்கிறார். முன்சீப், ஜட்ஜிகள் இருக்கிறார்கள். கலெக்டர் இருக்கிறார். இவர்கள் இலாக்காக்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவரில்லையே? இவர்களின் நிர்வாகம் என்ன ஒழுங்கற்றா இருக்கிறது? இன்னும் கேட்டால் சொல்வேன். முனிசிபாலிடியைக் கலைத்து விட்டால் முனிசிபல் நிர்வாகம் இன்னும் கொஞ்சம் ஒழுங்காகவே நடக்கும் என்றுகூடச் சொல்லுவேன். எனக்கு சேர்மென், பிரசிடெண்ட், மெம்பர் வேலைகள் நான் பார்த்த அனுபவம் எனக்கு உண்டு. அங்கு நடக்கும் பொறுப்பற்ற தன்மை எனக்குத் தெரியும்.

ஆதலால் முனிசிபாலிடிகள் ஜில்லா போர்டுகள் இருக்க வேண்டிய அவசியமே இல்லை என்பதும், அப்படி இருந்தாலும் அதில் ஒரு கௌன்சிலருக்கோ மெம்பருக்கோ எந்த கௌரவமான பொறுப்பான வேலையும் இல்லை என்பதும் தான் என்னுடைய அபிப்பிராயம்.

தனிப்பட்ட நபருக்கே கவுன்சிலில் எத்தகைய வேலையும் இல்லை என்றால் ஒரு கட்சிக்கு மாத்திரம் என்ன வேலையிருக்க முடியும். இப்போது பல வருடங்களாக பெரும்பாலும் காங்கிரஸ் கட்சி தானே முனிசிபல் கவுன்சிலில் பெரும்பான்மை ஸ்தானங்களைப்பெற்றிருந்தது. அது நாளது வரை எந்த முனிசிபாலிடிகளில் என்ன புதுக் காரியங்கள் சாதித்திருக்கிறது. மற்றவர் செய்யா—அவர்கள் அல்லாதவர்கள் செய்யாத—எந்த சீர்திருத்தங்களைச் செய்திருக்கிறது என்று இந்த ஊர்பற்றியோ, மற்ற ஊர்பற்றியோ யாராவது கூறட்டுமே பார்க்கிறேன்.

"நாங்கள் ஆகஸ்டு தியாகிகள். ஆதலால் எங்களுக்கு ஓட்டுப்போடுங்கள்" என்று கேட்டால் கவுன்சிலில் ஸ்தானம் என்ன ஆகஸ்டு தியாகத்துக்கு கூலியா என்று கேட்கிறேன். அல்லது ஆகஸ்டு தியாகிகளுக்கோ காங்கிரஸ் பக்தர்களுக்கோ முனிசிபல் நிர்வாகத்தில் ஏதாவது தனிமையான திட்டமுண்டா என்று கேட்கிறேன். மேலும் தங்கியுள்ள மட்டும் மூவர்ணக்கொடி நாட்டிக் கொள்ளவும், காந்திபடமும் எங்கு வேண்டுமானாலும் மாட்டிக்கொள்ளவும் காங்கிரஸ் சர்க்காருக்கு உரிமை பெறப்பட்டுவிட்ட பிறகு அவற்றிற்காக இந்த தியாகிகள் கவுன்சிலுக்குப் போகவேண்டியதில்லையே என்கிறேன். கமிஷனர்களுக்கே அந்த அதிகாரம் இருக்கிறதே?

மாகாண அரசாங்கம் காங்கிரஸ் கையிலிருக்கும்போது அவர்களால் நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்கள்தானே முனிசிபல் நிர்வாகத்திலிருப்பார்கள். அவர்களை நிர்வாகம் செய்ய மேல்பார்வை பார்க்க மற்றொரு ஜனநாயக ஸ்தாபனம் இருக்கவேண்டும் என்றால் இதிலென்ன நியாயம், அவசியம் இருக்க முடியும்? வேறு கட்சி இருப்பதற்காவது ஏதாவது நியாயமுண்டு.

ஆதலால் காங்கிரஸ் கட்சியானது கவுன்சிலுக்குப் போய் செய்ய வேண்டிய வேலையோ திட்டமோ ஒன்றும் இல்லாதபோது அந்தக் கட்சியின் பேராலேயே ஒருவர் ஓட்டுக் கேட்டால் கேட்பவருக்குக் கவுன்சிலுக்குப் போக சொந்த யோக்கியதையின் மீது ஓட்டுக் கேட்க அருகதையில்லையென்றுதானே அர்த்தம். அப்படிப்பட்ட தகுதியும் திறமையும் இல்லாததால்தானே கட்சிப் பேரை வேண்டியிருக்கிறது என்று கேட்கிறேன்.

உத்தியோகமானால் ஜாதி சொல்லி கேட்கலாம்.

நிற்க இப்பொழுது முனிசிபல் கவுன்

சிலுக்குச்சென்று ஜனநாயக கவுன்சிலர்கள் செய்யக்கூடிய உருப்படியான வேலை என்னவென்றால் பொதுவாக கவுன்சிலர் வீடுவீடாகச்சென்று "குப்பைகள் இங்குதான் போடவேண்டும். தெருக்களை இப்படிச் சுத்தமாய் மக்கள் வைத்துக்கொள்ளவேண்டும்'' என்று போதனை செய்யலாம். முட்டுச் சந்துகள் இருந்தால் அவற்றை விசாலப்படுத்தலாம். அவ்விடங்களில் வீடுகள் கட்டலாம், அவற்றை வாடகைக்கு விடலாம். இன்னும் போதுமான கடைகளை விலைக்கு வாங்கி தான்யக்கடை, மளிகைக்கடை, ஜவுளிக்கடை பாத்திரக்கடை, இரும்புக்கடை இவை யாவற்றையும் முனிசிபாலிட்டியின் பொறுப்பில் நடத்தலாம். அதனால் மக்களுக்கு எவ்வளவோ பயன் ஏற்படும். சரக்குகளை நியாயமான விலை வைத்து விற்கலாம். போக்குவரத்துக்காக பஸ் ஜட்கா ஒற்றைமாட்டு வண்டி இவைகளை முனிசிபாலிட்டியே நடத்தலாம். லேவாதேவிக்கடை கூட முனிசிபாலிட்டியே நடத்தலாம். இவ்விதமாக முனிசிபாலிட்டிக்குட்பட்ட எல்லையில் 'எந்த ஒரு தனிப்பட்ட மனிதனும் ஒரு ஓர்தைக்காசு லாபம் அடையமுடியாத ரீதியில்' கூட்டுறவு முறையில் நிர்வாகம் செய்யலாம். இதையெல்லாம் செய்யவேண்டுமானால் கவுன்சிலுக்குப் பொதுநலமே கருதுபவனும் பொது நலத்திற்காக எதையும் வெறுத்துத் தள்ளக்கூடியவனும் நிர்தாட்சண்யமானவனும் அக்கிரமக்காரரைக் கண்டிக்கத்தக்கவனும், சர்க்காரைக் கட்டாயப்படுத்தும்படியான எதிர்கட்சியாரும் செல்ல வேண்டும். இன்னும் கேட்டால் தோழர்களே! டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட், போலீஸ், ரிஜிஸ்ட்ரார், இவர் இலாகாக்கள் இவை யாவும் முனிசிபல் கவுன்சிலின் ஆட்சியின்கீழ் வரவேண்டும். அப்படிப்பட்ட திட்டம் காங்கரசாரிடம் உண்டா? மாகாண அரசாங்க நிர்வாகம் பூராவும் நம்மால் தெரிந்தெடுத்து அனுப்பப்படும் மந்திரிகளின்கீழ் இருக்கும்போது ஒரு நகரத்தைப் பொறுத்துள்ள இந்த நிர்வாகங்கள் ஏற்கனவே ஏற்பட்டுள்ள சட்டப்படியே நடக்கவேண்டியதிருப்பதால் முன்ன காரியங்கள் மேல்பார்க்க அந்நகர மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் கட்சி சம்பந்தமற்ற மக்களின்கீழ் விடப்பட்டால் முனிசிபாலிட்டிக்கு என்ன கெடுதி ஏற்படும்? சதந்திர அறிவுள்ள தனிப்பட்ட மக்கள் கூடி ஒரு காரியத்தைக் கவனிப்பதற்கு ஒரு கட்சிக்குக் கட்டுப்பட்ட 10 அடிமைகள் சேர்ந்து கட்டுப்பாட்டின்மீது கவனிப்பதற்கும் வித்தியாசம் இல்லையா? காங்கரஸ் கட்சி என்பது இன்று இந்த நாட்டில் இந்த ஊரில் எதில் கட்டுப்பாடு நாணயம் கொண்டு இருக்கிறது? பதவி பெறுவதில் மாத்திரமே தவிர கட்சிக்கட்டுப்பாடு நாணயம் அங்கே யாரிடம் இருக்கிறது? காங்கரஸ்காரர்கள் காங்கரஸை ஏய்க்கிறார்கள், மீறுகிறார்கள். ஒருவருக்கு ஒருவர் உதை, அடி போட்டுக்கொண்டு தங்களுக்குள்ளாகவே ஒருவரையொருவர் போட்டி போட்டுக்கொண்டு துரோகம் செய்துகொள்ளுகிறார்கள், இப்படிப்பட்ட நாணயஸ்தர்களும் யோக்கியர்களும் கட்சிப்பேர் சொல்லி ஓட்டுக் கேட்பது பித்தலாட்டமா அல்லவா என்பதையோசித்துப் பாருங்கள். இந்த ஊர் காங்கரசார் உதை போட்டுக்கொள்ளவில்லையா? காங்கரஸ் அபேட்சகரை எதிர்த்துக் காங்கரஸ் மெம்பர் நிற்கிறாரா இல்லையா? காங்கரஸ் அபேட்சகருக்கு காங்கரஸ் மெம்பர் எதிரிடையாய் வேலை செய்கிறாரா இல்லையா? தேற்றுவரை காங்கரஸ் அல்லாதவர் நிறுத்தப்பட்டிருக்கிறாரா இல்லையா? பிளாக்மார்க்கட் வியாபாரிகள் கொள்கை அற்ற வீரர்கள் காங்கரஸ்போரால் நிறுத்தப்பட்டிருக்கிறார்களா இல்லையா? இந்த யோக்கியதையில் இருப்பவர்கள் கட்சிபேர் சொல்லி ஓட்டு கேட்பது எவ்வளவு துணிச்சலான பித்தலாட்டம் என்பதை யோசித்துப் பாருங்கள். இவர்கள் கவுன்சிலுக்குள் போனால் எப்படி யோக்கியமாய் நடந்துகொள்ளமுடியும்? எவ்வளவு அக்கிரமம் வேண்டுமானாலும் செய்வார்களா இல்லையா? காங்கரஸ்கட்சி கவுன்சிலர்கள் திருடினால் லஞ்சம் வாங்கினால் அயோக்கியத்தனம் செய்தால் காங்கரஸ் மந்திரிகள் மன்னித்து விடுவார்கள். மற்றவர்கள் செய்தால் தண்டிப்பார்கள். ஆதலால் காங்கரஸ்காரர் அல்லாதவர்களாகப் பார்த்து அனுப்புங்கள். அவர்கள் தப்பு காரியம் செய்யப் பயப்படுவார்கள். காங்கரஸ்காரர்கள் அதிகாரிகளைக்கண்டால் பயப்படமாட்டார்கள். அதிகாரிகள் இவர்களைக் கண்டால் பயப்படுவார்கள். இப்படிப்பட்டவர்களிடம் மேல்பார்வை அதிகாரம் கொடுத்தால் யோக்கியமாய், நாணயத்திற்குப் பயந்து நடக்கமாட்டார்கள். ஆனதால் நாணயத்துக்குப் பயப்படவேண்டியவர்களைப் பார்த்து அனுப்புங்கள். தோழர்களே! இது நான்சொன்னது, என் கருத்து, என் அனுபவம். எனக்கு ஓட்டு இருந்தால் நான் எப்படிப் பயன்படுத்துவேன் என்பது ஆகியவைகளைச் சொன்னேன். நீங்கள் இதை நம்பவேண்டுமென்றோ, இப்படித்தான் நடக்கவேண்டுமென்றோ நான் சொல்லவில்லை. காங்கரஸ்காரர்கள், காங்கரஸ் அபேட்சக பிரமுகர்கள் சொல்லுவதையும் கேட்டு உங்கள் சொந்த அறிவு அனுபவம் கொண்டு சிந்தித்து பார்த்துச் செய்யுங்கள். கூச்சலுக்கும், கூப்பாட்டுக்கும் குழப்பத்துக்கும் அடாவடித் தனத்துக்கும் பயந்து பொறுப்பற்று, ஓட்டுகளைத் தப்பாக உபயோகிக்காதீர்கள் என்று வேண்டிக்கொண்டு என் பேச்சை நிறுத்திக்கொள்கிறேன்'' என்பதாக பேசினார்.

## தோழர்கள் கவனிக்க.

நம் "குடி அரசு" பத்திரிகையில் இனிமேல் கட்டுரைகளுக்கு மட்டுமே இடம் அளிக்க எண்ணியிருப்பதால் இயக்கச்செய்திகள், நன்கொடைகள் ஆகியவற்றை தயவுசெய்து சென்னை 'விடுதலை'' பத்திரிகைக்கே அனுப்பிவிட வேண்டுகிறோம்.

—ஆசிரியர்.


## எங்களிடம் கிடைக்கும் புத்தகங்கள்

★

| | |
|---|---|
| தத்துவ விளக்கம் (ஈ. வெ. ரா) | 0—12—0 |
| ஞான சூரியன் | 0—6—0 |
| (பாரதிதாசன் எழுதியவை) | |
| பாரதிதாசன் கவிதைகள் | 3—8—0 |
| பாண்டியன் பரிசு | 3—8—0 |
| எதிர்பாராத முத்தம் | 1—4—0 |
| காதல் நினைவுகள் | 0—12—0 |
| தமிழ் இயக்கம் | 1—0—0 |
| அழகின் சிரிப்பு | 1—0—0 |
| இசையமுது | 0—10—0 |
| குடும்பவிளக்கு I | 0—6—0 |
| குடும்பவிளக்கு II | 0—10—0 |
| சௌமியன் | 1—4—0 |
| கற்கண்டு | 2—0—0 |
| நல்ல தீர்ப்பு | 0—10—0 |
| (சி. என். அண்ணாதுரை எழுதியவை) | |
| ஏ! தாழ்ந்த தமிழகமே | 0—8—0 |
| நாடும் ஏடும் | 0—6—0 |
| நல்ல தீர்ப்பு | 0—6—0 |
| திராவிடர் நிலை | 0—6—0 |
| விடுதலைப்போர் | 1—0—0 |
| குமரிக்கோட்டம் | 1—0—0 |
| வர்ணாஸ்ரமம் | 0—12—0 |

கிடைக்குமிடம்:-

நாதன் கம்பெனி லிமிடெட்,

கச்சேரிவீதி, ஈரோடு.


Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42, Cutchery street, ERODE.